

வேலூர் மாவட்டம் காட்பாடி சட்டமன்றத் தொகுதி மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிடும் கழகப் பொதுச் செயலாளர் தி.மு.க. வேட்பாளர் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கஸ்தூரிபாய் தெருவில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். உடன் மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் டிடாசரவணன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. ஆட்சிக்காலத்தில்தான்

# மாணவர்களின் கல்வி நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்கள்!

## அமைச்சர் துரைமுருகன் வாக்கு சேகரிப்பின் போது பெருமிதம்!

வேலூர், ஏப்.14-

தி.மு.க. ஆட்சிக்காலத்தில் மாணவர்களின் கல்வி நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன என்று அமைச்சர் துரைமுருகன் வாக்கு சேகரிப்பின் போது பெருமிதத்துடன் கூறினார்.

வேலூர் மாவட்டம் காட்பாடி சட்டமன்ற தொகுதி தி.மு.க. வேட்பாளர், அமைச்சர் துரைமுருகன் வேலூர் மாநகராட்சிக்கு உட்பட்ட 8வது வார்டு பாரதிநகர், குளக்கரை, கஸ்தூரி பாய் தெரு, 6வது வார்டு பழைய காட்பாடி, திருவள்ளுவர் நகர் மற்றும் மந்தைவெளி, திருநகர், பேங்க்நகர், அருப்புமேடு உள்ளிட்ட பகுதிகளில் உதயசூரியன் சின்னத்துக்கு வாக்கு சேகரித்தார். அப்போது அவருக்கு பொதுமக்கள் மலர்தூவியும், ஆரத்தி எடுத்தும், மேளதாளங்கள் முழங்க சிறப்பான வரவேற்பு அளித்தனர். வாக்கு சேகரிப்பின் போது அமைச்சர் துரைமுருகன், பொதுமக்களிடம் கூறியதாவது: காட்பாடி தொகுதியில் உள்ள அருப்புமேடு உள்பட பல்வேறு இடங்கள் சென்னையை போன்று சிறப்பான வளர்ச்சி அடைந்துள்ளன. தி.மு.க. ஆட்சிக்காலத்தில் தான் பெரும்பான்மையான வளர்ச்சி ஏற்பட்டது. திருவள்ளுவர் நகரில் ரூ.13 லட்சத்தில் ரேஷன்கடை கட்டி திறக்கப்பட்டுள்ளது. குடிநீர் சுத்திகரிப்பு நிலைய பணிகள் நிறைவடைந்து விட்டது. தேர்தலுக்கு பின்னர் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் கொண்டு வரப்படும். ஒரு சமுதாயம் முன்னேற்றம் அடைய பல்வேறு திட்டங்களை தி.மு.க. அரசு செய்துள்ளது.

மாணவர்களின் கல்வி நலனுக்காக...

பெண்களின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் அரசு டவுன் பஸ்களில் பெண்கள் கட்டணமில்லா பயணம் செல்லும் திட்டம் கொண்டு வரப்பட்டது. பெண்கள் தங்கள் குடும்பத்தின் சிறிய தேவை, குழந்தைகளை கவனிப்பதற்காக மாதந்தோறும் ரூ.1,000 உரிமைத்தொகை வழங்கப் படுகிறது. தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன் மகளிர் உரிமைத்தொகை ரூ.2 ஆயிரமாக வழங்கப்படும். அரசு, அரசு உதவிப் பெறும் பள்ளிகளில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 கல்வி உதவித் தொகை, அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் பள்ளிகளில்

5ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை உணவுத்திட்டம், கல்லூரி இறுதியாண்டு பயிலும் மாணவர்களுக்கு மடிக்கணினி, நான் முதல்வன் திட்டம் உள்பட மாணவர்களின் கல்வி நலனுக்காக பல்வேறு திட்டங்கள் தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்டது. வேலூர் மாநகராட்சி துணை மேயர் சுனில்குமார் இந்த பகுதியை சிறந்த திட்டங்கள், கடினமான உழைப்பால் சென்னை தி.நகரை போன்று மாற்றி உள்ளார். இவ்வாறு அமைச்சர் பேசினார். பிரசாரத்தின் போது துணைமேயர் எம்.சுனில்குமார் மற்றும் தி.மு.க., கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்ட தேர்தல் ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தலைமையில் தீவனூரில் நடைபெற்றது. கூட்டத்தில் கழக கொள்கை பரப்புச் செயலாளர் ஜெகத்ரட்சகன் எம்.பி. கலந்து கொண்டு மைலம் தொகுதி தே.மு.தி.க. வேட்பாளர் வெங்கடேசனுக்கு வாக்குச் சேகரித்தார். உடன் மண்டல பொறுப்பாளர் உழவர் நலன் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், முன்னாள் ஒன்றிய அமைச்சர் செஞ்சி ராமச்சந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

### வேலூரில் இன்று மாலை

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை!

## மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. அறிக்கை!

வேலூர், ஏப். 14 -

மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. அறிக்கை வருமாறு:-

திராவிட நாயகர், இந்தியாவே போற்றும் புதுமையான நலத்திட்டங்களின் சிற்பி கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மாவட்டந்தோறும் பரப்புரைகளை மேற்கொண்டுவருகிறார்.

நமது வேலூர் மாவட்டத்திற்கு உட்பட்ட 5 சட்டமன்ற தொகுதிகளில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர்களை ஆதரித்து, இமாலய வெற்றிக்கு வழிவகுக்கும் வகையில் உத்வேகம் அளிக்க மாபெரும் பொதுக் கூட்டத்திற்கு தலைமை தாங்கி இன்று (14.04.2026) மாலை 5 மணியளவில் பரப்புரை மேற்கொள்ள வருகை தரவுள்ளார்.

எனவே, நமது வேலூர் வடக்கு மாவட்டத்திற்கு



திராவிட மாடல் ஆட்சி வகுத்தளித்துள்ள சாதனைத் திட்டங்களை நெஞ்சில் தாங்கி, மாநில, மாவட்ட, தொகுதி, ஒன்றிய, பகுதி, பேரூர், கிளை, கழக நிர்வாகிகள், அணிசார் நிர்வாகிகள் அனைவரும் திரளாக பங்கேற்க வேண்டும்.

அன்பு உடன்பிறப்புகளே கொள்கைக் களம் காண கழகத் தலைவர் அழைக்கிறார் அணி திரண்டு வாரீர்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# களத்தில் இளைஞர் அணி

**மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கழக இளைஞர் அணி நிர்வாகிகள் வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.**




பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி,
திருநெல்வேலி மத்திய மாவட்டம்.




சங்ககிரி சட்டமன்றத் தொகுதி,
சேலம் மேற்கு மாவட்டம்.




உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதி,
திருப்பூர் தெற்கு மாவட்டம்.




தென்காசி சட்டமன்றத் தொகுதி,
தென்காசி தெற்கு மாவட்டம்.




ஓசூர் சட்டமன்றத் தொகுதி,
கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம்.




சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதி,
சேலம் மத்திய மாவட்டம்.




திருவரங்கம் சட்டமன்றத் தொகுதி,
திருச்சி மத்திய மாவட்டம்.




சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி,
சென்னை தெற்கு மாவட்டம்.




தஞ்சாவூர் சட்டமன்றத் தொகுதி,
தஞ்சாவூர் மத்திய மாவட்டம்.